# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல 9,037 — 1942 ம் ஆண்டு கார்த்திகைமீ 20 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## PART IV.—நான்காம் பாகம்

### அரசாட்சியாரின் விளம்பரம்.

**L. D.—B 269/31.**

**ஸ்தல யாத்திரைகளைப் பற்றிய சட்டம்.**

*கதிர்காம இல்மகாசசித (திருக்கார்த்திகை) திருவிழா பிரமாணங்கள்*

"ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய ஒரு சட்டம்" (அதிகாரம் 133) என்னும் மகுடா நாமமுடைய சட்டத்தின் 2ம் பிரிவின் கீழ் நான் பெற்ற அதிகாரத்தைக்கொண்டு, இலங்கை ராஜப்பிரதிநிதியாகிய அன்று கொல்டிகொற ஆகிய நான், வழக்கம்போல 1942 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகை மாசத்தில் தொடங்கி நடக்கும் இல்மகாசசித திருவிழாவை எதிர்நோக்கி, இந்த விளம்பரத்தினால் கீழ்க்காட்டப்படும் பிரமாணங்களை ஆக்குகின்றேன்.

அ. கொல்டிகொற,<br>
ராஜப்பிரதிநிதி

கண்டி, 1942 ம் ஆண்டு கார்த்திகைமீ 15 ந் உ.

*பிரமாணங்கள்*

1. இப்பிரமாணங்களில், "பாடி எல்லை" என்பது பின்வரும் எல்லைக்குள் உள்ள இடங்களைத் தன்னுள் அடக்கும் —

(அ) கதிர்காம மகா தேவாலயத்திலிருந்து அரை மைல் சுற்றளவிற்குள் உள்ள இடங்களையும்,

(ஆ) செல்லக் கதிர்காமப் பிள்ளையார் கோவிலிலிருந்து கால் மைல் சுற்றளவிற்குள் உள்ள இடங்களையும் ஆகும்

2. (அ) 1942 ம் ஆண்டு இல்மகாசசித திருவிழா நடக்கும் நாட்களும் யாத்திரிகர் கதிர்காமத்தில் தங்கிநிற்கும் நாட்களும் நவம்பர்மீ 21 ந் திகதி தொடங்கி 23 ந் திகதி வரையுள்ள (இவ்விரண்டு நாட்களுமுட்பட உள்ள) மூன்று நாட்கள் மாத்திரமே

(ஆ) ஒரு யாத்திரிகனாவது நவம்பர் மாசம் 21 ம் நாளுக்குமுன் பாடி எல்லைக்குள் வந்து சேரக்கூடாது 23 ம் நாளுக்குப்பின் அவ்வெல்லைக்குள் தங்கி நிற்கக்கூடாது.

3. பாடி எல்லை பொதுவாக ஊவா மாகாண அரசாங்க ஏஜண்டரின் அதிகாரத்துள்ளும் "மேற்பார்வையாளர்" என்று பெயர் பெற்று நியமிக்கப்பெறும் உத்தியோகத்தரதும், அவருக்குதவிபுரியும் வைத்தியரும், பாடிக் காவலுக்குரிய பொலீஸ் தலைவரும் ஆகியவர்களதும் நேர் அதிகாரத்தின்கீழும் இருக்கும்

4. (1) மேற்பார்வையாளர் கதிர்காமத்திற்குப்போகும் பயண வழியிலும் திரும்பிவரும் பயணவழியிலும் அதிகாரஞ் செலுத்திப் பின்வருவனவற்றைச் செய்ய உரிமையுடையர் —

(அ) தான் குறிப்பிட்ட இடங்களை மாத்திரமே கழுவவும், நீராடவும், குடிக்கத் தண்ணீர் எடுக்கவும். மலசலங்கழிக்கவும் உபயோகிக்கலாமென்று இடம் நியமனஞ்செய்யவும்

(ஆ) ஒவ்வொரு வகுப்பினுமுள்ள யாத்திரிகருந் தங்க வெவ்வேறிடம் நியமிக்கவும்

(இ) எக்கூட்ட யாத்திரிகராயினும் போவதற்கு வழிநியமித்து அவ்வழியாற் போகச்செய்யவும்

(ஈ) யாத்திரிகருக்குக் கொடுக்கப்படும் ஊண் பகிரப்படுதலைப் பார்த்து நடத்தவும்

(உ) நோய் அடையும் யாத்திரிகர் தங்கத் தனியிடங்களை நியமிக்கவும், மற்றவர்கள் அவர்களுடன் கலவாது தடுக்கவும், பயணஞ் செய்யத் தகாதவர்களாய அந்நோயாளிகளிருந்தால் தடுத்து வைத்திருக்கவும் (உரிமையுடையர்).

(2) ஒரு ஆளாவது மேற்பார்வையாளர் மேலே (1) இலக்கமிடப்பட்ட பிரமாணத்தில் குறிக்கப்பட்ட விஷயங்களுக்கு இடும் நீதியான கட்டளையை மீறக்கூடாது.

5. யாராயினும் பாடியெல்லைக்குள், அரசாட்சி ஏஜண்டரால் அல்லது அவருடைய உத்தரவுடன் இத்தேவைக்கென்று அமைக்கப்பட்ட இடத்திலன்றி வேறிடத்தில் மலசலங்கழிக்கக்கூடாது.

6. யாராயினும் திரவமானவோ அல்லது கெட்டியானவோ எவ்விதமான கழிவு பொருளையும் பாடியெல்லைக்குட்பட்ட இடங்களில் இதற்கென்று அரசாட்சி ஏஜண்டரால் அமைக்கப்பட்ட அல்லது அவருடைய உத்தரவுடன் அமைத்த இடம் அல்லது கலத்திலன்றிப் போடக்கூடாது

7. யாராயினும், பாடியெல்லைக்குட்பட்ட இடத்தில் மேற்பார்வையாளரால் கட்டளையிடப்பட்ட தலத்திற்கு மேலே, கங்கையில் குளிக்கவாவது இறங்கவாவது கூடாது.

8 மாடுகளை அல்லது வண்டி மாடுகளை மேற்பார்வையாளர் அல்லது அவரால் கட்டளைபெற்ற இன்னொருவர் கொடுத்த உத்தரவுச் சீட்டில்லாமல் பாடியெல்லையிலிருந்து காற் கட்டைக்குள் கொண்டுவரக்கூடாது.

9. 8 ம் பிரமாணத்தின்கீழ் கொடுக்கும் ஒவ்வொரு உத்தரவுச் சீட்டும், பாடியின் சுகாதாரத்தையும் சனங்களின் சுகத்தையும் காப்பாற்றும் விஷயமாகவும், பாடி யெல்லைக்குள் போக்குவரவை அடக்கி நடத்தும் விஷயமாகவும் மேற்பார்வையாளரால் இடப்படும் விதிவிலக்கு களுக்குட்படும்

10. அரசாட்சி ஏஜண்டரிடமிருந்து இதற்கென்று உத்தரவுச்சீட்டுப் பெற்றாலல்லது, ரொட்டி சுடும் கடையாவது, சோடாச் செய்யும் தொழிற்சாலையாவது, தேநீர் அல்லது கோப்பிநீர்க் கடையாவது, சாப்பாட்டுக் கடையாவது காலையாவது பாடியெல்லைக்குள் அமைக்கக்கூடாது உத்தரவுச் சீட்டுப் பணமின்றி இனாமாகக் கிடைக்கும்.

11 (1) எவ்விதமாகவாவது விபரிக்கக்கூடிய எப்பொருளையாவது பாடியெல்லைக்குள் மேற்பார்வையாளரால் இதற்கென்று நியமிக்கப்படாத இடத்தில் விற்பனைக்கு வைத்திருக்கக்கூடாது.

(2) மேற்பார்வையாளர் அல்லது வைத்திய உத்தியோகத்தர் சுகத்திற்கேற்காதென்று விலக்கிய, அல்லது இவர்களில்லாத நேரம் பொலீஸ் தலைவர் விலக்கிய உணவுப்பண்டத்தை யாரும் விற்கக்கூடாது.

(3) மேற்பார்வையாளர் அல்லது வைத்தியர் அல்லது இவர்களில்லா நேரம் பொலீஸ் தலைவர் உண்ண ஏற்காதென்று தள்ளும் உணவு பொருளைப் பறித்து அழிவுசெய்வது எந்தப் பொலீஸ் வேலைக்காரருக்கோ அல்லது சுகாதார சோதனைகாரருக்கோ நீதிக்குட்பட்ட செய்கையாகும்.

12 (1) எல்லாச் சாப்பாட்டுக் கடைகளும், தேநீர், கோப்பிநீர்க் கடைகளும் சுத்தமாகவும் சுகாதாரத்திற்கேற்ற முறையிலும் இருக்கவேண்டும்.

(2) எல்லாப் பலகாரங்கள், இனிப்புப்பண்டங்கள், சமைத்த உணவுப் பொருட்கள், விற்பனைக்கென்று வெளியில் வைப்பன, தகுதியாயமைத்த ஈ நுழையாத கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருக்கவேண்டும்

(3) கழிவு தேயிலையோ, கோப்பியோ, பாலோ, உணவுக்கழிவோ சமையற் கழிபொருளோ அல்லது வேறெவ்வித கழிவுபொருளோ நிலத்தில் எறியக் கூடாது இவ்வித எல்லாக் கழிவு பொருட்களும் கீழ் விபரிக்கும் விதமான கொள்கலத்தில் (பெட்டியில்) சேர்த்துவைத்து எந்த நேரத்திலும் சுகாதாரப் பகுதியாரால் அப்புறப்படுத்தப்பட ஆயத்தமாயிருக்க வேண்டும்

(4) விற்பனைக்கோ, அல்லது வியாபாரஞ் செய்வதற்கோ உபயோகிக்கப்படும் ஒவ்வொரு கட்டடமும், கொட்டிலும், இடமும் லோகத்தால் அல்லது மரத்தால் செய்யப்பட்டு 4½ கன அடிக்குமேல் உள்ளிடமுள்ள ஊத்தை கொள்கலமுடையதாயிருக்க வேண்டும் இந்தக் கட்டடம், கொட்டில், அல்லது இடத்தில் சேரும் கழிவு பொருட்கள் சொல்லப்பட்ட ஊத்தைக் கொள்கலத்தில் இடப்பட்டு, ஊத்தைப் பொருள் உள்போட அல்லது வெளியில் எடுக்கத் திறக்கும் நேரமல்லா மற்று நேரமெல்லாம், லோகம் அல்லது மரமூடியால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

13. எவ்வித தொற்றும் அல்லது பரவும் வியாதியுடைய யாரையாவது பாடி எல்லைக்குள் ஒருவரும் அழைத்துவரக்கூடாது, அல்லது பாடி எல்லைக்குள் நுழைய உதவிசெய்யவோ நுழையும்போது ஒத்துழைக்கவோ கூடாது

14. திருவிழாக் காலத்தில், பாடியிடத்தில் ஏதும் தொற்று நோய் உண்டுபடின், அரசாட்சி ஏஜண்டர் யாத்திரையாளரை பாடியிடத்திலிருந்து விலகும்படி கட்டளையிடவும் விலகி வெளிப்போகும் வழியைக் குறித்துக்காட்டவும், திரும்பிப்போக உபயோகிக்கும் வாகனத்தையும், போகும் முறையையும் குறிப்பிட்டுக் கட்டுப்படுத்தவும் நீதிக்குட்பட்ட அதிகாரமுடையர்.

15 பாடியிடத்தில் இருப்பவர்களில் தொற்றும் அல்லது பரவும் நோய் உண்டாகும் ஒவ்வொருவரும் அன்றியும் தொற்றும் அல்லது பரவும் நோயுள்ளவரென்று அறியப்பட்ட ஒருவருடன் கூட இருந்த ஒவ்வொருவரும் இதனைப் பாடித் தலைவராயுள்ள வைத்திய உத்தியோகத்தருக்கு அறிவிக்கக் கடமைப்பட்டவராவர்

16 அரசாங்க ஏஜண்டருடைய முன்னுத்தரவின்றி பாடி எல்லைக்குள் தெருவாகப் பாவிக்கப்பட்டோ அல்லது தெருவிற்கென்று ஒதுக்கிவைக்கப்பட்டோ இருக்கும் நிலத்தில் யாராவது கடை கட்டவோ அல்லது அந்நிலத்தின் பகுதி சேரக் கட்டடத்தைப் பெருப்பித்துக் கட்டவோ கூடாது

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம ஷூ-தது 3 ம இலககச சடடததினது 7 ம பிரிவின பிரகாரம் டெமபிள அவெனியுவை விசாலமசெயதல எனனும பகிரஙக தேவைக வேணடியதான பினனாசசொலலபபடும காணிகளே, அஃதாவது .—

பிரதமபடதது இல A 1,396 குறிசசி—கடடுககுறுநதையும, குடாஹீனடடியாஙகலேயும

| துண்டு. | காணியின பெயா. | விபரம | உரிததாளியின பெயா | விசாலம ஏ | று | ப |
|---|---|---|---|---|---|---|
| 1 | மதனகஹவததை, கொழுமபுத தெரு, 287, 288, 288A, வரிப பண நொமபரில பகுதிகள | 2 வயதுளள 3 தெனனம்பிளளேகள, 3–15 வயதுளள 4 கமுகுகள, 20–40 வயதுளள 3 பலாககள, 40 வயதுளள 1 மா, 10 வயதுளள ஒரு முருஙகை, 30 வயதுளள 1 கோமபமரம, 3 வயதுளள 2 தோடைகள, சாநதாற கடடபபடடு ஓடடால வேயபபடட கடடிடததில ஒரு பகுதியும, நறபோதைய பாவிபபிறகான கறகூசமுளள தோடடம் | கடடுககுறுநத வாசிகளான பிடடிகல ஆராச சிககே பபாஹாமி, மொறமுதலிகே சாலோ சிஞஞோ அபபுஹாமி, பினறகம விதான லாகே எடவேட டி சிலவா, பினறகம விதானலாகே எடமன டி சிலவா, பினறகம விதானலாகே மகிகி டி சிலவா, பினறகம விதானலாகே லோறனஸ டீ சிலவா, பினறகம விதானலாகே ஸடானலி டீ சிலவா | 0 | 0 | 7·3 |
| 2 | ஷெ | 40 வயதுளள 2 தெனனேகள, 6–10 வயதுளள 5 தெனனேகள, 40 வயதுளள ஒரு பலா, 30 வயதுளள 4 கமுகுகள, 6 வயதுளள 5 கமுகுகள; 30 வயதுளள 5 றபபர் மரஙகள, 40 வயதுளள 1 கல்மரம, 40 வயதுளள 1 தொமபமரம, 40 வயதுளள 1 மா, 3 வயதுளள ஒரு எலிமிசசை 8 வயதுளள 1 ஈரபபலாவுமுளள தோடடம | கடடுககுறுநத வாசிகளான பெனறகம விதானலாகே எடவெட டி சிலவா, மேறபடி எடமன டீ சிலவா, மேறபடி மகி டீ சிலவா, மேறபடி லோறனஸ டீ சிலவா, மேறபடி ஸடானலி டீ சிலவா, மொறமுதலிகே சாலோசிஞஞோ அபபுஹாமி பிடடிகல ஆரசாரிகே பபாஹாமி | 0 | 0 | 14·4 |
| 3 | வழி (நமபா இலலே) | வழி .. | ஷெ | 0 | 0 | 05 |
| 4 | மதனகஹவததை, கொழுமபுத தெரு, 287, 288, 288A, வரிப பண நமப்ரில பகுதி | வெணநிலம . | ஷெ | 0 | 0 | 02 |
| 5 | கிரிகேவததபாவுல, கொழுமபுத தெரு, 287, 288, 288A வரிப பண நமபரில பகுதி | 4–10 வயதுளள 7 தெனனேகள, 4–8 வயதுளள 5 பலாககள, 6 வயதுளள 1 றபபா மரமுமுளள தெனனநதோடடம | கடடுககுறுநத வாசிகளான பெனறகம விதானலாகே எடவேட டீ சிலவா, மேறபடி எடமன டீ சிலவா, மேறபடி மகி டி சிலவா மேறபடி லோறனஸ டீ சிலவா, மேறபடி ஸடானலி டி சிலவா | 0 | 0 | 3·4 |
| 6 | நெமபிகொடகுறுநதுவதத கொழுமபுததெரு, 298, 298A வரிபபண நமபரிற பகுதிகள | 50 வயதுளள 2 தெனனேகள, 30 வயதுளள 1 கமுகு, 4 வயதுளள ஒரு றபபாமரம, 15 வயதுளள ஒரு றமபுடடான மரமுமுளள தோடடம | குடாஹீனெடடியாஙகல வாசிகளான காலலகே றேசலின பொனநது, காலலகே செலஸதினு பொனநது, காலலகே பாவிலஸ தினு பொனநது, காலலகே பெமமோ பொனநது, காலலகே அகஸதினு பொனநது, தேவபபுறகே இகுன | 0 | 0 | 1·6 |

எடுததுககொளவதறகான எததனஞசெயயுமபடி (203 ம அதிகாரம்) காணி எடுததுககொளவதைபபறறிய சடடததினது 5 ம பிரிவின ஏறபாடுகளின பிரகாரம தேசாதிபதியவாகள ஸதல ஸதாபன நிருவாக சபைககு கொடுதத தததுவததைககொணடு அசசபை எனககுக கறபனேசெயதிருபபதனுல அககாணிகளே ஆடசிஒபபுககொளள அரசாடசியாா எணணியிருககிறா எனபதை 6 ம பிரிவினபடி வேணடிய பிரகாரம நான இதனேககொணடு பிரசிததமாய விளமபரஞசெயகிறேன

மேறகுறிதத காணிகளுககு உரிததுபபேசுகினற சகலரும தாமாக அலலது அவரவருடைய காரியகாராமூலமாய 1942 ம ஷூ (டிசெமபா) மாாகழி மாதம 12 ந தேதியிலனறு முறபகல 10 30 மணிககு களுததுறைக கசசேரியில எனமுனபாக வெளிபபடடுந தததமககு அககாணிகளிலுளள உடநதைகளினது தனமையையும அவவுடநதைகளுககாயத தாம சாதிககும உரிததுகளின தொகையையும விவரஙகளேயும சொலலுமபடி இதனுல அவாகளிடததிற கேடடுககொளளபபடுகினறது

களுததுறைக கசசேரி,
1942 ம ஷூ (நவமபா) காாததிகைமீ 16 ந உ

ஜீ ஆா டபிளயு. த சிலவா,
களுததுறை மேல உதவி அரசாடசி ஏசணடு.

1876 ம ஷூ-தது 3 ம இலககச சடடததினது 7 ம பிரிவின பிரகாரம இததபானேயில (பொதகுமபுறகனுன துணடுகளில) உபபுத தணணீரை நீககுதறகு வரமபும கானும கடடல எனனும பகிரஙகதேவைககு வேணடியதான பினனாச சொலலபபடும காணிகளே, அஃதாவது —

ஸதீர கிராமபடதது இல 78 குறிசசி—இததபானே

| துணடு. | காணியின பெயா. | விபரம | உரிததாளியின பெயா | விசாலம ஏ. | று | ப |
|---|---|---|---|---|---|---|
| 332 | எததோட்டுவேகெருவ .. | .. வெணநிலம .. | .. உரிததாளியின பெயா தெரியாது | .. 0 | 0 | 14 |
| 333 | ஷெ .. | .. ஷெ .. | .. ஷெ .. .. | .. 0 | 0 | 17 |

எடுததுககொளவதறகான எததனஞ்செய்யும்படி (203 ம அதிகாரம) காணி எடுத்துக்கொளவதைபபறறிய சடடததினது 5 ம பிரிவின ஏறபாடுகளின பிரகாரம தேசாதிபதியவாகள ஸதல ஸதாபன நிருவாக சபைககுக கொடுதத தததுவததைககொண்டு அசசபை எனககுக கறபனேசெயதிருபபதனுல அககாணிகளே ஆடசிஒப்புககொளள அரசாடசியாா எணணியிருககிறா எனபதை 6 ம பிரிவினபடி வேண்டிய பிரகாரம நான இதனேககொணடு பிரசிததமாய விளம்பரஞ்செயகிறேன.

மேறகுறிதத காணிகளுககு உரித்துப்பேசுகினற சகலரும தாமாக அலலது அவரவருடைய காரியகாராமூலமாய 1942 ம ஷூ (டிசெமபா) மாாகழி மாதம் 12 ந தேதியிலனறு முறகலல 11 மணிககு களுததுறைக கசசேரியில எனமுனபாக வெளிபபடடுத தததமககு அககாணிகளிலுள்ள உடநதைகளினது தனமையையும அவவுடநதைகளுககாயத தாம சாதிககும உரிததுகளின தொகையையும விவரஙகளேயும சொலலுமபடி இதனுல அவாகளிடததிற கேடடுக கொளளபபடுகினறது.

களுததுறைக கசசேரி,
1942 ம ஷூ (நவமபா) காாததிகைமீ 16 ந உ.

ஜீ. ஆா. டபிளயு த சிலவா
களுததுறை மேல உதவி அரசாடசி ஏசணடு.

1876 ம ஷூ-த்து 3 ம இலககச சட்டததினது 6 ம் பிரிவின பிரகாரம களுததுறை டிஸ்திறிககைசசோநத நாபொட படடினததைத திருததல, சநதைபபகுதிப பளள நிலததை நிரபபல எனனும பகிரஙக தேவைககு வேணடியதான பினனாச சொலலபபடும காணிகளே, அஃதாவது :—

பிரதமபடதது இல A 1,460. குறிசசி—பஹல நாபொட (பகுதி).

| துண்டு. | காணியின் பெயா. | விபரம. | உரிததாளியின பெயா. | விசாலம. ஏ. | று. | ப |
|---|---|---|---|---|---|---|
| 1 | சுகாதாரப் பகுதிச சநதைகள, 10ம் வரிப்பணக காணியில பகுதி | சாநதாற கட்டப்பட்ட கடடிடமும், கானகளுமுளள வெணநிலம | இலஙகை றேசா றபபா கொமபெனி, கட்டிடமும் கானகளும களுததுறைச சுகாதாரப பகுதியால உரிததுசசொலலபபடுகிறது | 0 | 0 | 8 75 |
| 2 | குளோடன தோடடம 7 ம வரிப பண நிலததிற பகுதி | 3 வயதுளள கமுகும, ஆறுமாத வளாசசியுளள 2 வாழையடியுமுளள தோட்டம | இலஙகை றேசா றபபா கொமபெனி .. | 0 | 0 | 2 31 |
| 3 | குளோடன தோடடம (வரிபபண நமபா இலலே) | 30 வயதுளள 16 றபபரும், 3 வயதுளள 1 பலாவும 10 மாவும், 2 கிததுலமரமும 1 றமபுடடான மரமுமுளள தோடடம | ஷெ . .. | 0 | 1 | 1 86 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி (203 ம் அதிகாரம்) காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் அதன் ஸ்தாபன நிருவாக சபையாருக்கும் கொடுத்த தத்துவத்தைக்கொண்டு அச்சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிப்படுத்திக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1942 ம் ஞு (டிசெம்பர்) மார்கழி மாதம் 12 ந் தேதியன்று முற்பகல் 11 30 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது

களுத்துறைக் கச்சேரி,
1942 ம் ஞு (நவம்பர்) கார்த்திகைமீ 16 ந உ.

ஸ்ரீ ஆர் பெரேரா, ந ஸிலவா,
களுத்துறை மேல் உதவி அரசாட்சி ஏசண்டு

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு வண்டிப்பாதையைத் திருத்தி குடிசனத்தின் காணிக்கூடாய் கொண்டுபோய் முடிக்குரிய காணியோடு தொடுக்க என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது —

முடிவுப்படம் இல 631 க்கு பிரதி இல. 3 குறிச்சி—யோதங்கண்டி.

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 198 | பானசாலேவத்தை | சிறுகாடு | யோதங்கண்டியிலிருக்கும், போதிமஹாவிகாரையிலிருக்கும், கே விப்பஸ்ஸி தேரோ | 0 0 10 2 |
| 199 | ஷ | ஷ | ஷ | 0 0 11·3 |
| 200 | ஷ | ஷ | ஷ | 0 0 10·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிப்படுத்திக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1942 ம் ஞு (டிசம்பர்) மார்கழி மாசம் 11 ந் தேதியன்று 3 மணிக்கு திசை நாயகத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது

அம்பாந்தோட்டைக் கச்சேரி,
1942 ம் ஞு நொவெம்பர் கார்த்திகைமீ 17 ந உ.

சீ. சிற்றம்பலம்,
உதவி அரசாட்சி ஏசண்டு

---

## இலங்கை (அரசாங்கசபை தேர்தல்) விஷயமாய இராசசிய மந்திர ஆலோசனைச சபையில் ஏற்பட்ட 1931 ம் ஆண்டின் சட்டம்.

இல 1—கொழும்பு வட தோதற் பகுதி

மேற்குறித்த தோதற் பகுதிக்குச்சேர்ந்த வாக்காளரின் திருத்தியமைத்த பெயரிடாப்பு பூர்த்தியாக்கப்பட்டிருக்கின்றதென்றும், அவ்விடாப்பு கொழும்பு, கோட்டை குமாரவீதியிலிருக்கும் பதிவுசெய்யும் உத்தியோகஸ்தர் கந்தோரில் கந்தோர் வேலை மணித்தியாலங்களில் பார்வையிடத்தக்கதாய்த் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது

இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய இராசசிய, மந்திர ஆலோசனைச சபையிலேற்பட்ட 1931 ம் ஆண்டின் சட்டத்துக்கிணங்க, மேற்குறித்த தோதற் பகுதிக்குரிய பெயரிடாப்பில் தனது பெயரைப் பதிவிப்பதற்குத் தகைமையுடையோராயிருக்கும் எவரும் அல்லது அவ்விடாப்பிலிருந்து விடுபட்டு அல்லது நீக்கப்பட்டுள்ள பெயரையுடையவராய் அப்பெயரைப் பதிவிப்பதற்கு உடந்தையுள்ள எவரும், தனது பெயரை இடாப்பிற் பதிவிக்கும் நோக்கமாக இந்த அறிவித்தல் அரசாட்சியாரின் "கெசெற்" பத்திரிகையில் வெளிவந்து இரண்டு கிழமைகளுள் கொழும்பு கோட்டை குமாரவீதியிலிருக்கும் பதிவுசெய்யும் உத்தியோகஸ்த (Registering Officer) ரிடம் சேரும்படி எழுத்தில் சமர்ப்பித்த கேள்விப்பத்திரமொன்றை ஒப்புவிக்கலாம்—அக்கேள்விப்பத்திரம், இலங்கை (அரசாங்கசபை தேர்தல்) விஷயமாய இராசசிய மந்திர ஆலோசனைச சபையிலேற்பட்ட 1935 ம் ஆண்டின் திருத்தச் சட்டத்தால் திருத்தப்பட்ட இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய இராசசிய மந்திர ஆலோசனைச சபையிலேற்பட்ட சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காணுகிற 'A' என்ற மாதிரிப்பத்திரப்படியிருப்பதோடு (மாதிரிப்பத்திரப் பிரதிகள் குறித்த பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்) கேள்விக்கு ஆதாரமாயிருக்கும் நியாயங்கள் காட்டப்படும் அறிவித்தல்கள் கிடைப்பதற்காக விலாசமென்று கொடுக்கப்பட்டுமிருத்தல் வேண்டும் ஆனால் 1942 ம் ஆண்டு புரட்டாதிமீ 15 ந் திகதி, அல்லது அதற்குமுன் மேற்குறித்த சட்டத்தின் 14 ம் அம்சத்துக்கிணங்க தானனுப்பிய கேள்விப்பத்திரமொன்று குறித்த பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் கிடைத்திருந்தாலன்றி, 8 ம் அல்லது 9 ம் அம்சத்தின்படி தகைமையுடையவர் என்ற நியாயங்கொண்டு தனது பெயரை இடாப்பில் எழுதுவித்துக்கொள்ளும்படி கேட்க எவரும் உரிமையுள்ளவராகார்

மேற்குறித்த தோதற் பகுதிக்குரிய இடாப்பில் தனது பெயர் காணப்பெறுபவராய், இன்னொருவரின் பெயர் அல்லது தனது சொந்தப் பெயர் அந்த இடாப்பில் காணப்படுவதையிட்டு ஆக்ஷேபிப்பவரெவரும் அப்பெயரை இடாப்பிலிருந்து நீக்குவிக்கும் நோக்கமாய், இந்த அறிவித்தல் அரசாட்சியாரின் "கெசெற்" பத்திரிகையில் வெளிவந்து இரண்டு கிழமைகளுள் கொழும்பு கோட்டை குமாரவீதியிலிருக்கும் பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் சேரும்படி எழுத்தாலாய விண்ணப்பப்பத்திரமொன்றை ஒப்புவிக்கலாம். அவ்விண்ணப்பப்பத்திரம் இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய இராசசிய மந்திர ஆலோசனைச சபையிலேற்பட்ட 1931 ம் ஆண்டின் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காணுகிற "B" என்ற மாதிரிப்பத்திரப்படியிருப்பதோடு (மாதிரிப் பிரதிகள் குறித்த பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்) ஆக்ஷேபனைக்காதாரமான நியாயங்கள் காட்டப்படும், அறிவித்தல்கள் கிடைப்பதற்காக விலாசமொன்று கொடுக்கப்பட்டுமிருத்தல் வேண்டும்

சி எம் அகளவத்த,
கொழும்பு வட, கொழும்பு மத்திய,
கொழும்பு தென் தோதற் பகுதிகளின்
பதிவுசெய்யும் உத்தியோகஸ்தர்

கொழும்பு, 1942 ம் ஞு கார்த்திகைமீ 17 ந உ.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

கொழும்புப் பகுதியிலுள்ள சியனகோறளை மெதபத்துவைச்சேர்ந்த அலுத்கம கம்பஹாவில் வசிக்கும் குறுப்பு ஆராச்சிகே காலின் ஸிறிமதியாகிய நான் மாத்தறைப் பகுதியில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ் கடமை பார்க்கும் ஒருவராக நியமிக்கும்படி அரசினர் பதிவுக்கந்தோர் தலைவரிடம் இன்றுமுதல் 3 மாதத்துக்குப்பின் விண்ணப்பிப்பேன் என்பதை நொத்தாரிஸ் கட்டளைச் சட்டம் 91 ம் பிரிவு 1 B செடூலில் 2 ம் பிரமாணத்தின்படி இத்தால் அறிவிக்கிறேன்.

கே. ஏ. காலின் ஸிறிமதி,
பண்டாரவத்தை, கம்பஹா

1942 ம் ஆண்டு ஒக்டோபர்மீ 10 ந உ